## 7. NREGS-TN

### 7.18 மாநில வேலை உறுதிக் குழுவில் சில உறுப்பினர்களை சேர்த்தல் மற்றும் அரசுத் துறை செயலாளர்களை மட்டும் உறுப்பினர்களாக நியமித்தல்

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (சிஜிஎஸ்–1) துறை

அரசாணை (நிலை) எண். 10 நாள் : 6–02–2007

படிக்க:

அரசாணை (நிலை) எண்.117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சிஜிஎஸ்.1) துறை, நாள் 14.9.2006.

**ஆணை**

படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு மாநில வேலை உறுதி திட்டத்தைக் கண்காணிக்கவும் மற்றும் அதன் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும் தமிழ்நாடு மாநில வேலை உறுதிக் குழு ஒன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. அக்குழுவில் 10 அலுவல்சார் உறுப்பினர்களும், 15 அலுவல்சாரா உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

2. தமிழ்நாடு மாநில வேலை உறுதிக் குழுவின் முதற்கூட்டம் 25–11–2006 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இதர தீர்மானங்களுடன் கீழ்கண்ட தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்–5

அண்மையில் நடைபெற்ற உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகிகளின் பிரதிநிதிகளை சேர்க்கவும், இத்திட்டத்தின் செயலாக்கத்தில் நேரடி தொடர்புடைய அரசுத் துறை செயலாளர்களை மட்டும் உறுப்பினர்களாக நியமிக்கவும் தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தின் அமைப்பினை மாற்றி அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

3. தமிழ்நாடு மாநில வேலை உறுதிக் குழுவில் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்ட அலுவல்சாரா உறுப்பினர்களில் சிவகங்கை மாவட்டம், கட்டேந்தல் சுக்கானூரணி ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. அருள்மேரி அவர்கள் தவிர, ஏனைய உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் எவரும் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெறவில்லை. ஆகவே, தமிழ்நாடு மாநில வேலை உறுதிக் குழு கூட்டத்தில் தீர்மானித்தபடி, உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த புதிய நிர்வாகிகளின் பிரதிநிதிகளை நியமனம் செய்யவும் மற்றும் இத்திட்டத்தின் செயலாக்கத்தில் நேரடித் தொடர்புடைய அரசுத் துறைச் செயலாளர்களை மட்டும் நியமனம் செய்யவும் அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி படிக்கப்பட்ட அரசாணை பத்தி 4–I–இல் குறிப்பிடப்பட்ட அலுவல்சார் உறுப்பினர்களுக்குப் பதிலாக கீழ்கண்ட அலுவலர்களை மட்டும் அலுவல்சார் உறுப்பினர்களாக நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

1. தலைமைச் செயலாளர்<br>(தலைவர் இல்லாத போது குழுமத்தின் தலைவராக பணியாற்றுவார்)
2. செயலாளர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – உறுப்பினர் செயலாளர் மற்றும் அமைப்பாளர்.
3. செயலாளர், நிதித் துறை
4. செயலாளர், பொதுப்பணித் துறை
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்

4. மேலும், படிக்கப்பட்ட அரசாணை பத்தி 4-II-(iii), (iv) மற்றும் (எ) – இல் குறிப்பிடப்பிட்ட அலுவல்சாரா உறுப்பினர்களுக்குப் பதிலாக கீழ்கண்ட ஊரக உள்ளாட்சி அமைப்பின் தலைவர்களை தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தில் புதிய அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

மாவட்ட ஊராட்சித் தலைவர் (ஒன்று)

1. திருமதி. ஆர். கவிதா பார்த்திபன்.
மாவட்ட ஊராட்சித் தலைவர்,
திண்டுக்கல் மாவட்டம்

ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் (இரண்டு)

2. திரு. எம். அன்பழகன்.
ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்,
மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம்,
விழுப்புரம் மாவட்டம்.

3. திரு. எஸ்.ஜெயச்சந்திரன்.
ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்,
காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியம்,
கடலூர் மாவட்டம்.

கிராம ஊராட்சி தலைவர்கள் (ஐந்து)

4. திருமதி. கவிதா கார்மேகம். தலைவர், கூவனூத்து கிராம ஊராட்சி, திண்டுக்கல் மாவட்டம்.

5. திருமதி.ஜி. மாலா கணேசன், தலைவர், செம்பனார்கோவில் கிராம ஊராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம்.

6. திரு. பி. சுந்தராஜன், தலைவர், கண்டமங்கலம் கிராம ஊராட்சி, விழுப்புரம் மாவட்டம்.

7. திரு. எஸ். வேல்முருகன், தலைவர், மேல்கரிப்பூர் கிராம ஊராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.

8 திரு. குப்புசாமி, தலைவர், குறிச்சி கிராம ஊராட்சி, சிவகங்கை மாவட்டம்.

5. படிக்கப்பட்ட அரசாணை பத்தி 4 – II – (எ)–இல் வரிசை எண்.12ல் குறிப்பிடப்பட்ட திருமதி. அருள்மேரி, தலைவர், கட்டேந்தல் சுக்கானூரணி ஊராட்சி, சிவகங்கை மாவட்டம் அவர்கள் தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தில் அலுவல்சாரா உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்